**2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட பொருள்**

**1.** மாவட்ட ஆட்சித்தலைவர் / ஊராட்சிகளின் ஆய்வாளர், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.4575.2018.அ1, நாள். 06.08.2021ம் தேதிய கடிதத்தில் ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பொன்னிமாந்துரை ஊராட்சி உட்கடை கிராமங்களில் தோல்கழிவு நீரினால் நிலத்தடி நீர் முழுவதும் உப்பாக மாறி குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளதாகவும், மேலும் தற்போது 2.கி.மீ. தொலைவில் உள்ள தாமரைகுளத்தில் இருந்து ஊராட்சிக்கு குடிநீர் வழங்கப்பட்டுவருவதாகவும், இந்தக்குடிநீர் குடிப்பதற்கு உகந்த நீராக இல்லை என்பதால் இனிவரும் காலங்களில் ஆத்தூர் காமராஜர் சாகர் நீர்த்தேக்கத்திலிருந்து மாநகராட்சிக்கு குடிநீர் நீரேற்றம் செய்யப்படும் பிரதானக்குழாயிலிருந்து பொன்னிமாந்துரை ஊராட்சியின், பொன்னிமாந்துரை, சின்ன பொன்னிமாந்துரை, நல்லேந்திபுரம், டி.புதூர், குட்டியபட்டி, குருவப்பநாயக்கன்பட்டி மற்றும் ராயர்பட்டி ஆகிய குக்கிராமங்களுக்கு திண்டுக்கல் முதல் வத்தலக்குண்டு புறவழிச்சாலையில் கருப்பச்சாமி கோவில் வழியாக செல்லும் பிரதான பைப்லைனிலிருந்து குடிநீர் வழங்க கோரியுள்ளார். அதன்படி வட்டாரவளர்ச்சி அலுவலர்(கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், ரெட்டியார்சத்திரம் அவர்களின் கடிதம் ந.க.எண். 2759/2021/சி1, நாள். 27.08.2021ல் மன்ற தீர்மான எண்.209, நாள். 05.07.2021 ஒப்புதல் பெற்று இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட கிராமங்களில் மொத்த மக்கள் தொகை 5586, அங்கு வாழும் கால்நடைகளின் எண்ணிக்கை 983 ஆகும். எனவே மேற்கண்ட கிராமங்களுக்கு குடிநீர் வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாகம் அனுமதி பெறுவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. (ந.க.எண்.5793 / 2021 / இ2)

**அலுவலகக் குறிப்பு**

நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று தொடர்நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 221 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக் கூட்ட பொருள்**

**1.** திண்டுக்கல் மாநகராட்சியில் உதவிப்பொறியாளராக (திட்டம்) பணிபுரிந்து வரும் திருமதி. க. பரஞ்ஜோதி என்பவர் ஒரு வழி மாறுதலில் மதுரை மாநகராட்சிக்கு மாறுதல் கேட்டு தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக 19.08.2021 ஆம் தேதியில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதை மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்ய பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது. (ந.க.எண். 6509/2021/இ.1 1)

**அலுவலக குறிப்பு..**

திருமதி. க. பரஞ்ஜோதி உதவி பொறியாளர் ( திட்டம் ) அவர்கள் தனது விண்ணப்பத்தில் மதுரை மாநகராட்சி மாறுதல் கோரியதை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரைக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 222 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

2.திண்டுக்கல் மாநகராட்சியின் குடும்ப ஓய்வூதியதாரர் திரு.பழனிச்சாமி, ம/பெ மாரியாயி / சுப்பன் என்பவர் பிடித்தம் செய்யப்பட்ட ஓய்வூதியப் பணப் பயன்களை மீளவும் வழங்கிடக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழக்கு எண். WP (MD) எண். 12670 / 21 இல் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகிய வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/- திருஜே.லாரன்ஸ், மாமன்ற வழக்கறிஞருக்கு வழங்கிட அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.7126 / 2018 / பி 2)

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 223 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

3.மாவட்டச் செயலாளர், இந்திய ரெட்கிராஸ் சொசைட்டி, திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண்.IRCS/DGL/01, நாள்.03.08.2021 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் ந.க.எண்.6501/2021/ஊ.வ11(1), நாள்.12.08.2021ம் தேதிய கடிதங்களில் தெரிவிக்கப் பட்டுள்ளதற்கிணங்க இம்மாநகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய 2018, 2020ம் ஆண்டுகளுக்கான நிலுவை சந்தா தொகை ரூ.5000/- வீதம் ரூ.10,000/-மும் மற்றும் 2021 நடப்பு ஆண்டிற்கான சந்தா தொகை ரூ.5000/- ஆகமொத்தம் ரூ.15,000/-ஐ இந்திய செஞ்சிலுவைச் சங்கம், திண்டுக்கல் அவர்களுக்கு வழங்கிடவும், மேற்படி செலவினம் இம்மாநகராட்சி வருவாய் மற்றும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3853/2020/எச்2).

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 224 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

4. இம்மாநகராட்சியில் துப்புரவு பணியாளராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக கடந்த 30.04.2018 அன்று ஓய்வு பெற்ற திருமதி. சின்னம்மாள் க/பெ அழகர் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் இம்மாநகராட்சி ஆணையரை பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட நீதிப்பேராணை வழக்கு எண்.9765/2019, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.1150/2019 மற்றும் நீதிப்பேராணை வழக்கு எண்.2009/2020ல் இம்மாநகராட்சியின் சார்பாக திரு. ஜே. லாரன்ஸ் மாமன்ற வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை அவர்களை ஆஜராகிட கேட்டுக் கொள்ளவும், மேற்கண்ட வழக்கிற்காகும் உத்தேச செலவினம் ரூ.22,500/-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண்**.3938/2019/பி3).

<u>அலுவலகக் குறிப்பு..</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்: 225 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

5.திண்டுக்கல் மாநகராட்சி பொறியியல் பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்குகளில், இம்மாநகராட்சி மாமன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவ் வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்க வேண்டியுள்ளதால் எதிர் வரும் காலங்களில் 2021 – 2022 ஆம் நிதியாண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.75000/- க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **( ந.க.எண்.** 16495 / 2017 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்: 226 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**6.** திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான சந்தை சாலையில் அமைந்துள்ள பழைய நவீன ஆட்டிறைச்சிக் கூடம் சேதமடைந்த நிலையில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், மேற்கண்ட ஆட்டிறைச்சி கூடத்தை மராமத்துப் பணி மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.6.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மாமன்றத்தின் பார்வைக்கும், அதற்கான செலவினத் தொகைக்கு மாமன்றத்தின் அனுமதியும் வேண்டப்படுகிறது. **( ந.க.எண்.** 6971 / 2021 / இ 4)

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்: 227 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

7.திண்டுக்கல் மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்திலிருந்து மாநகராட்சி பகுதி மற்றும் வழியோர கிராமங்களுக்கு தினந்தோறும் 120 HP Motor மற்றும் 90 HP Motor, திறந்தவெளிக் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இம் மோட்டார் மற்றும் பம்ப்செட்டுகளை இயக்குவதற்கு மின்வாரியத்திடமிருந்து, மின் இணைப்பு எண். 29, இன் வழியாக 500 KVA மின் சப்ளை பெறப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. ஆனால் தற்போது வரை மோட்டார் மற்றும் பம்ப்செட்டுகளை இயக்குவதற்கு 360 KVA மின் சப்ளையே போதுமானதாக உள்ளது. எனவே மின்வாரியத்திடமிருந்து பெறப்படும் 500 KVA மின் சப்ளையை 400 KVA ஆகக் குறைத்து பெற மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.11262 / 2018 / இ 3)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மின் வாரியத்திற்கு கட்டணம் கேட்பு அடிப்படையில் செலுத்தவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 228 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

8. திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் கசிவு கண்டறியும் வாகன எண். டி.என்.57.க்யூ.3255 க்கு 2021 -- 2022 ஆம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட இரு நிறுவனங்களிடமிருந்து 02.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1) குமார் ஆட்டோ கேர் | - | ரூ.44700/- |
| 2) கே.எம்.எ. மோட்டார்ஸ் | - | ரூ.48300/- |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 5709/ 2021 / இ3)

**அலுவலக குறிப்பு**

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.44700/- க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 229 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

9. திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் லாரி வாகன எண். டி.என்.57.எ.3210 க்கு 2021 -- 2022 ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட இரு நிறுவனங்களிடமிருந்து 02.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) குமார் ஆட்டோ கேர் - ரூ.44700/-

2) கே.எம்.எ. மோட்டார்ஸ் - ரூ.49200/-

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 5698 / 2021 / இ3)

அலுவலக குறிப்பு

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.44700/- க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 230 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

10. திண்டுக்கல் மாநகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தனது கடிதம் ந.களண். 20452 / 2020/ எல் எ3, நாள் 31.3.2021 மற்றும் 21.4.2021 இல் ஆம் தேதியில் Tied Grant ஆக 2020 – 21 ஆம் நிதியாண்டிற்கு கீழ்க்கண்டவாறு தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | முதல் தவணை : நாள் 24.11.2020 | ரூ.1, 75, 34, 977. 00 |
| 2 | இரண்டாம் தவணை : நாள் 9.4.2021 | ரூ.1, 75, 34, 978. 00 |
| | | **ரூ.3,50,69, 955.00** |

மேற்கண்ட நிதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணி மற்றும் குடிநீர் திட்டப் பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கீழ்க்கண்ட வேலைகள் தேர்வு செய்யலாம்.

| **வ. எண்** | **பணி விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில்** |
|---|---|---|
| | **திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணி** | |
| 1 | பேட்டரி ஆபரேடட் வண்டிகள் - 100 எண்ணிக்கைகள் (Battery Operated Vehicle ) -- 1 எண்ணம் ரூ.2.20 இலட்சம் வீதம் | 220.00 |
| 2 | ஏற்கனவே வாங்கப்பட்ட Battery Operated Vehicleக்கு அபிவிருதிப் பணிகள் செய்தல் | |
| | அ) 10 வண்டிகளுக்கு | 5.00 |
| | ஆ) 10 வண்டிகளுக்கு | 5.00 |
| | இ) 11 வண்டிகளுக்கு | 5.00 |
| 3 | ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள 9 நுண்ணுயிர் செயலாக்க மையப் பயன்பாட்டிற்கு தேவையான இயந்திரம் வாங்குதல் | |
| | a) Shredding Machine – 9 Nos | 37.00 |
| | b) Bundle Machine – 9 Nos | 4.50 |
| 4 | **குடிநீர் திட்டப் பணி** | |
| | அ) பூ மார்க்கெட் முதல் ரவுண்ட் ரோடு வரை பிரதானக் | 21.00 |

| | | |
|---|---|---|
| | குழாய் பதிக்கும் பணி | |
| | ஆ) மொச்சைக் கொட்டை பிள்ளையார் கோவில் முதல் பூ மார்க்கெட் வரை பிரதானக் குழாய் பதிக்கும் பணி | 50.00 |
| | இ) ) மதுரை ரோடு முதல் மேட்டுப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வரை பிரதானக் குழாய் பதிக்கும் பணி | 14.00 |
| | **மொத்தம்** | **361.50** |

(ந.க.எண். 3170 / 2021 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு Battery Operated Vehicle வாங்க நிர்வாக அனுமதி பெறவும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்: 231 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**11.** திண்டுக்கல் மாநகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்யம் 2020 – 21 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் Untied Grant ஆக இரண்டு தவணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் விடுவிக்கப்பட்டுள்ளது.. Untied Grant தொகையில் முதல் தவணைத் தொகை ரூ.1,75,34,977/- திண்டுக்கல் மாநகராட்சிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் தவணைத் தொகை ரூ.1,75,34,978/- ஐ நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் ந.க.எண். 7979/ 2020/ அ 3, நாள் 30.6.2021 இல் விடுவிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட மொத்த நிதியான ரூ.3,50,69,954/- இல் மாநகராட்சிக்குத் தேவையான பணிகளை தேர்வு செய்து செயல்படுத்தலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் தனது 30.06.2021 ஆம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மாநகராட்சியில் இத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு பணிகள் தேர்வு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | வார்டு 32, நத்தம் சாலை மாநகராட்சி விருந்தினர் மாளிகை பின்புறம் உள்ள காலியிடத்தில் நுண்ணுயிர் கூடம் அமைத்தல் | 70.00 |
| 2 | வார்டு 19, திட்டச் சாலை காலியிடத்தில் நுண்ணுயிர் கூடம் அமைத்தல் | 31.00 |
| 3 | வார்டு 20 , மாநகராட்சி அலுவலகம் அருகில் உள்ள காலியிடத்தில் நுண்ணுயிர் கூடம் அமைத்தல் | 31.00 |
| 4 | வார்டு 1, மாநகராட்சி உரக்கிடங்கு அருகில் உள்ள காலியிடத்தில் நுண்ணுயிர் கூடம் அமைத்தல் | 70.00 |
| 5 | வார்டு 22, தாலுகா ஆபீஸ் சாலையில் மாநகராட்சி காலியிடத்தில் நுண்ணுயிர் கூடம் அமைத்தல் | 31.00 |
| | | 233.00 |
| 6 | **குடிநீர் திட்டப் பணிகள்** | |
| | அ) மேற்கு ரத வீதி மொச்சைக் கொட்டை பிள்ளையார் கோவில் முதல் நந்தவன சாலை வரை பிரதான குடிநீர் குழாய் பதிக்கும் பணி | 50.00 |
| | ஆ) நந்தவன சாலை முதல் ஈ.வெரா. சாலை வரை பிரதான குடிநீர் குழாய் பதிக்கும் பணி | 50.00 |
| | இ) ) வேடபட்டி பிரதான குடிநீர் குழாய் பதிக்கும் பணி | 30.00 |

| | மொத்தம் | 353.00 |
|---|---|---|

(ந.க.எண். 3170 / 2021 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) கூடுதலாக ஆகும் மதிப்பீட்டுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 232 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**12.** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் **TN57 AF 9465** டிப்பர் லாரி வாகனத்திற்கு தகுதிச் சான்று முடிவடைவதால், மேலும் ஓராண்டிற்கு தகுதிச் சான்று பெறுவதற்கும், வாகனத்தின் பழுதுகளை சரி செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.45,000/–க்கு (ரூபாய் நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.5727/2021/எச்1)

<u>அலுவலக குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 233 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**13.** திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான காமராஜர் ஆத்தூர் நீர்த்தேக்க பகுதியில் உள்ள நரசிங்கபுரம் கிராமம் சர்வே எண். 165/1-ல் திரு. ராமசாமி என்பவர் ஆக்கிரமிப்பு செய்து வந்த நிலத்திற்கு பட்டா வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P(MD) No.23026/2019, வழக்கல் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி, வழக்கில் மாநகராட்சியின் அனுமதியில்லாமல் பட்டா வழங்க கூடாது என ஆட்சேபனை செய்யப்பட்டு மேற்படி வழக்கில் 6-ம் பிரதிவாதியாக சேர்க்க கோரி உயர்நீதிமன்றத்தில் மாநகராட்சி சார்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன்படி மேற்படி வழக்கினை நீதிமன்றம் தள்ளுபடி செய்யப்பட்ட காரணத்தினால் வாதியில் மீண்டும் மேற்படி வழக்கில் மேல்முறையீட்டு எண். W.A.(MD) NO. 1578/2019 –ல் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி, வழக்கினை பரிசீலனை செய்த நீதிமன்றம் 17.06.2021-ம் தேதிய தனது தீர்ப்பில் நீர்த்தேக்கப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை 2- மாதகாலத்திற்குள் அகற்றம் செய்ய உத்திரவிட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி ஆக்கிரமிப்புகளை கடந்த 11.08.2021 – அன்று இம்மாநகராட்சியால் அகற்றம் செய்யப்பட்டது. மேற்படி, வழக்கில் வழக்காடியதற்கு வழக்கு கட்டணம் ரூ. 10,000/- வழங்கவும், வழக்கறிஞர் தனது 25.06.2021-ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது. (ந.க.எண். 4959/2021/எப்2)

<u>அலுவலக குறிப்பு..</u>

வழக்கறிஞர் திரு. லாரன்ஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ. 10,000/- வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 234 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

14. வழக்கு திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நத்தம் ரோடு, பால அபிராமி நகர், வார்டு எண்.6, பிளாக் எண்.4, நகரளவு எண். 71/1L, 2U,3-ல் மாநகராட்சி சாலையினை மறித்து இரும்புகேட் அமைக்கப்பட்டதனை அகற்றம் செய்ய கோரி திருமதி. தீபா சந்திரசேகரன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD)NO. 19776/2020, வழக்கு தாக்கல் தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு கடந்த 11.01.2021-ம் தேதியன்று இரும்பு கேட்டினை அகற்றம் செய்ய கோரி நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்காணும் இடத்தில் இரும்புகேட் தொடர்ந்து அமைக்க அனுமதி கோரி திரு. விஜயன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD)NO. 1082/2021 -ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, வழக்கில் 25.01.2021-ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பாக ஆஜராகி வழக்காடப்பட்டதற்கு வழக்கு கட்டணம் வழங்க கோரி வழக்கறிஞர் திரு. ஜே. லாரன்ஸ் அவர்கள் கடந்த 05.01.2021 மற்றும் 01.02.2021 -ம் தேதியில் இரண்டு வழக்கிற்கும் வழக்கு கட்டணம் ரூ.15,000/- வழங்க கோரிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்பட்டது. **(ந.க.எண். 8617/2020/எப்2)**

<u>அலுவலக குறிப்பு..</u>

1. வழக்கறிஞர் திரு. ஜே. லாரன்ஸ் அவர்கள் மேற்கண்ட இரண்டு வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்தியதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி இரண்டு வழக்கிற்கும் கட்டணமாக ரூ.15,000/- வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 235 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

15. திண்டுக்கல் மாநகராட்சி கோட்டைக்குளம் சாலையில் புதுப்பிக்கப்பட்ட காந்தி தினசரி காய்கறி மார்க்கெட்டின் முன்புறம் ஏற்கனவே கட்டப்பட்டிருந்த மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த ஓட்டினால் ஆன எட்டு கடைகள் அபாயகரமான சூழ்நிலையில் இடிக்கப்பட்டுள்ளன. புதியதாக ஆர்.சி.சி.கான்கீரிட்டினால் ஆன 12 கடைகள் கட்டிடமாக கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.40,00,000/-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண். 8247 / 2019 / இ 4)**

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) இப் பணியினை மாநகராட்சி வருவாய் நிதி 2021 --- 22 ன் கீழ் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்: 236 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

16. தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பேரிடர் பெரும் தொற்று காரணமாக ஊரடங்கு தடை அமலில் உள்ளதால் கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மற்றும் உயர் அதிகாரிகளால் காணொளி வாயிலாக அடிக்கடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி ஆய்வுகளில் கலந்து கொள்ள திண்டுக்கல் மாநகராட்சியில் ஆணையர் அறைக்கு அருகில் உள்ள கூட்டரங்கில் காணொளி மூலமாக ஆய்வு நடத்த தேவையான Projector, Web Camera, Screen போன்ற அமைப்புகள் இல்லை. தற்போது இவ்

ஆய்வுகள் மாநகராட்சி ஆணையாளர் அறையில் உள்ள கணினி மூலமாக மேற்கொள்ளப்படுவதால், காட்சிகள் தெளிவற்றும், உரையாடல்களின் ஒலி அளவு போதுமானதாக இல்லாமலும் உள்ளது. எனவே மைை கூட்ட அரங்கில் Web Camera, Projector, 5'x7' அளவுள்ள Screen மற்றும் தேவைப்படும் இதர கருவிகளுடன் காணொளி அமைப்பினை ஏற்படுத்த ரூ1.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட பணியினை அவசர அவசியம் கருதி, திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு 15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி வழங்கிய திரு.எம்.ஸ்ரீதரன், ஒப்பந்ததாரர், திண்டுக்கல் **அவர்களின் மூலம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது ( ந.க.எண்.11658 / 2019 / இ 4 )**

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் பதிவு செய்யலாம்
2) இப் பணிக்கான செலவுத் தொகை ரூ.1,10,000/- னை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி, இப் பணியினை திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஸ்ரீதரன், ஒப்பந்ததாரர், திண்டுக்கல் **மூலம் மேற்கொண்டதையும்** மாமன்றம் பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண்: 237 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**17.** திண்டுக்கல் மாநகராட்சியில் மலையடிவாரத்தில் மலைக்கோட்டை நுழைவு வாயிலுக்கு முன்புறம் மாநகராட்சி குடிநீர் வாகனங்கள் குடிநீர் நிரப்பும் இடத்தில் தண்ணீர் தேங்கி சுகாதாரக் குறைவு ஏற்படுகின்றது. மேலும் திண்டுக்கல் மலைக்கோட்டைக்கு இப்பகுதி நுழைவு வாயில் என்பதாலும், மலைக்கோட்டைக்கு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் தினந்தோறும் அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர் என்பதாலும் இப் பகுதியில் தண்ணீர் தேங்கி நிற்காவண்ணம் வடிகால் அமைத்து பேவர் கற்கள் பதிக்கும் பணிக்கு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 11658 / 2019/ இ4** )

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்: 238 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**18.** திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேட்டுப்பட்டி வார்டு எண். 5, நகரளவு எண். 1439/2-க்கு தனியார் கட்டுப்பட்ட வேம்பன் குளத்தில் ஆயக்கட்டு பகுதியில் விற்பனை செய்யப்பட்ட 28 நபர்களின் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் ரத்து செய்ய கோரி திரு. ராஜு என்பவரால் திண்டுக்கல் மாவட்ட முதன்மை கூடுதல் நீதிமன்றத்தில் வழக்கு எண். ஓ.எஸ். 223/2021-ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கில் மாநகராட்சி ஆணையரை 29-ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மாமன்ற வழக்கறிஞர் திரு. ஜெயபிரகாஷ்

அவர்களை ஆஜராக கோரவும், மேற்படி வழக்கிற்கு உத்தேச செலவீனம் ரூ. 7,500/- வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.

(ந.க.எண். 6818/2021/எப்2)

<u>அலுவலக குறிப்பு.</u>

வழக்கறிஞர் திரு. ஜெயபிரகாஷ் வழக்கை நடத்தவும், உத்தேச வழக்கு கட்டணமாக ரூ.7,500/- வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 239 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**19.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் காணொலி வாயிலான ஆய்வு கூட்ட அறிவுரைகளில் நாள்.24/04/2021 தெரிவித்துள்ளவாறு, இம்மாநகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று மிக வேகமாக பரவி வருவதாலும், 48 வார்டுகளிலும் பொது இடங்களில் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID – 19) தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நாளது தேதி வரை தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், 48 வார்டுகளிலும் வீடு வீடாக சென்று கொரோனா தொற்று பரவுவதை கட்டுப்படுத்தவும், தடுப்பூசி போடவும், பணியாளர்கள் தேவைபடுவதால், தற்பொழுது டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக பணிபுரிந்துவரும் தற்காலிக கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC பணியாளர்கள்) பணியின் அவசர அவசியம் கருதி முதல்நிலை பணியான கொரோனா வைரஸ் தொற்று பணிகளை மேற்கொள்ளவும் பருவமழை தொடங்க உள்ள நிலையில் கூடுதலாக டெங்குகாய்ச்சல் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், வார்டுக்கு 1 நபர் வீதம் 48 வார்டுகளுக்கு 48 நபர்களையும் மற்றும் கடந்த ஆண்டு (முதல் அலை, இரண்டாம் அலை) கொரோனா வைரஸ் தொற்றால் அதிகமாக பாதிக்கப்பட்ட வார்டு எண்கள் 1,2,3,5,14,15,16,23,34,37,45,48 மொத்தம் 12 வார்டுகளில் கூடுதலாக ஒரு பணியாளரையும் நியமித்து (மொத்தம் 60 பணியாளர்கள்) தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிக்காலம் 31.08.2021டன் முடிவடைவதாலும் கொரோனா நோய்த்தொற்று 3-வது அலையின் முன்னெச்சரிக்கை பணிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதாலும், மேலும், நாளது தேதி வரை ஊரடங்கு உத்திரவு அமலில் உள்ளதாலும், டெங்குகாய்ச்சல் தடுப்பு பணியை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வரும் A.ராமலிங்கம், PWD ஒப்பந்தகாரர், அய்யம்பாளையம் அவர்கள் மூலமாகவே 01/09/2021 முதல் 30/11/2021 வரை 91 நாட்களுக்கு நீட்டிப்பு செய்து திண்டுக்கல் மாவட்ட 2020-2021 -கான தினக்கூலி ஊதிய பட்டியலில் கண்டுள்ளபடி நாள் ஒன்றுக்கு ரூ.389/- நிர்ணயம் செய்து, பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை COVID-19 மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2785/2020/எச்2)

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் திண்டுக்கல் மாநகராட்சி சட்டவிதி பிரிவு 15ன் கீழ் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்படி பணிக்கான காலத்தினை மேலும் 3 மாத காலத்திற்கு (01.09.2021 முதல் 30.11.2021 முடிய 91 நாட்களுக்கு) நீட்டிப்பு செய்தும், மேற்கண்ட பணிக்கான செலவினத்தை கொரோனா நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 240 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக் கூட்ட பொருள்</u>**

**1.** மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 2021 – 22 ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது “போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 50 நூலகங்கள் மற்றும் அறிவு சார் மையங்கள் நடப்பாண்டில் ஏற்படுத்தப்படும்” எனத் தெரிவித்ததுள்ளார். அதன்படி இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட முகமதியாபுரம் துவக்கப்பள்ளி வளாகத்தில் ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவு சார் மையம் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(** ந.க.எண். 1430 / 2021 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 241 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

2. திண்டுக்கல் மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட இடமான கதவு எண். 106, மேற்கு அசோக் நகர் குடியிருக்கும் திருமதி. பழனியம்மாள் என்பவர் வழக்கில் தனது சொத்தின் சுவற்றை இடித்து மராமத்து செய்து வெள்ளையடித்து கொள்ளவும், பிரதிவாதி -1 பாப்பாத்தி என்பவரின் கிழக்கு பக்க காம்பவுண்ட் சுவற்றினை இடித்து அப்புறப்படுத்த வலியுறுத்து கட்டளை வழங்கும்படி திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களை இரண்டாம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு திண்டுக்கல் மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண். O.S. NO. 310/2010 –ல் தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நாள் 27.04.2021. எனவே, வழக்கை எடுத்து நடத்திய திரு. ஜெயபிரகாஷ் வழக்கறிஞர் அவர்களுக்கு ரூ.5,000/- வழங்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.(ந.க.எண். 6066/2010/எப்3)

<u>அலுவலக குறிப்பு..</u>

வழக்கறிஞர் திரு. ஜெயபிரகாஷ் அவர்கள் வழக்கிளை தொடர்ந்து நடத்தி கொடுத்தமைக்கு வழக்கு கட்டணமாக ரூ. 5,000/- வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 242 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

3. திண்டுக்கல் மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட திருவள்ளுவர் சாலையில் சி.எஸ்.ஐ. சபைக்கு சொந்தமான அரசு புறம்போக்கு நிலத்தில் திருமதி. விஜயா இளங்கோவன் என்பவர் பலமாடி வணிக வளாகக்கட்டிடம் கட்டி வருவதாகவும், மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த கோரி திரு .சங்கிலி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P.NO 18390/2021-ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி, வழக்கில் ஆஜராக வழக்கு கட்டணம் ரூ. 10,000/- பட்டுவாடா செய்ய கோரி 11.09.2021-ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். திரு. லாரான்ஸ், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களின் கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது. (ந.க.எண். 6748/2021/எப்1)

<u>அலுவலக குறிப்பு..</u>

1) மாநகராட்சி ஆணையர் சார்பாக வழக்காட திரு. லாரன்ஸ், வழக்கறிஞர் அவர்களை நியமிக்கலாம்.
2) வழக்கறிஞர் திரு. லாரன்ஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ. 10,000/- வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 243 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**4.** திண்டுக்கல் மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட இடமான கச்சேரி தெருவில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கென ஒதுக்கப்பட்ட காலியிடத்தில் டேன் டீ (தேநீர் நிலைய கடை) வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் வழக்கு எண். W.P.(MD) NO. 14813/2021 மாநகராட்சி ஆணையர் அவர்களை 1-ம் பிரதிவாதியாகவும், முதுநிலை நகரமைப்பு அலுவரை 2-ம் பிரதிவாதியாகவும், உதவிசெயற்பொறியாளர் (திட்டம்) அவர்களை 3-ம் பிரதிவாதியாகவும், சேர்த்து வழக்கு தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கு 03.09.2021 அன்று மனுதாரருக்கு மாற்றிடம் தேர்வு செய்து தர தெரிவித்து நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட வழக்கினை நடத்தி கொடுத்தமைக்கு திரு. ஜே. லாரன்ஸ், சென்னை உயர்நீதி (மதுரைகிளை) வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ.7, 500/- வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது. (ந.க.எண். 2018/2018/எப்3)

<u>அலுவலக குறிப்பு..</u>

வழக்கறிஞர் திரு. லாரன்ஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ. 7,500/- வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 244 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**5.** திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.18652/2021/ஆர்1 நாள் 03.08.2021ம் தேதிய உத்திரவின்படி, திண்டுக்கல் மாநகராட்சி எழில் மிகு அரசு அலுவலகமாக பராமரிப்பு பணியின்பொழுது தேவைப்படாத அப்புறப்படுத்த வேண்டிய கழிவுக் காகிதங்கள், கரையான் அரித்த பதிவேடுகள், திண்டுக்கல் நகராட்சியாக இருந்தபொழுது அச்சடிக்கப்பட்ட பயன்படுத்த முடியாத அட்டைகள் மற்றும் அறிவிப்பு நோட்டீஸ்களை மத்திய சிறை, மதுரைக்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.7084/2021/டி1).

**<u>அலுவலக குறிப்பு..</u>**

1. ஒப்புதல் வழஙகலாம்.
2. அரசாணை எண்.1901 உள் (சிறை-ஏ நாள் 20.08.1990) அரசாணையின்படி சிறைத்துறை சேவைத் துறையாக ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து சிறை செய் பொருட்கள் அனைத்து அரசு துறைகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

**தீர்மானம் எண்: 245 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**6.** திண்டுக்கல் மாநகராட்சிக்கு அலுவலக உபயோகத்திற்கு 2021-22ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள் பதிவேடுகள் கணினி உபகரணங்கள் மற்றும் பல்வகை கணினி ரசீதுகள் முதலியவற்றை வாங்கிக் கொள்ள 2021-2022ம் ஆண்டு உத்தேச வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ.30.00 லட்சம் (ரூபாய் முப்பது லட்சம்) தொகைக்கு உட்பட்டு மேற்படி எழுதுபொருட்கள் பதிவேடுகள் கணினி உபகரணங்கள் மற்றும் பல்வகை கணினி ரசீதுகள் வாங்கிக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.7340/2021/டி1).

**<u>அலுவலக குறிப்பு..</u>**

1. ஒப்புதல் வழஙகலாம்.
2. மேற்படி எழுதுபொருட்கள், படிவங்கள் பதிவேடுகள் கணினி உபகரணங்கள் மற்றும் பல்வகை கணினி ரசீதுகள் அச்சடித்து வழங்க கூட்டுறவு அச்சகங்கள் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 246 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

7. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 2021 – 22 ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையில் உள்ளாட்சி அமைப்புகளில் திண்டுக்கல் மாநகராட்சியில் மார்க்கெட் மேம்பாடு பணிகளுக்காக ரூ.1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை தனது கடித எண். 21326 / 2021/ இ3, நாள் 9.9.2021 இல் தெரிவித்து உரிய கருத்துரு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். இதன்படி திண்டுக்கல் மாநகராட்சியில் பாரதிபுரம் வாரச் சந்தை மார்க்கெட்டில் அமைந்துள்ள (நுண்ணுயிர் செயலாக்க மையம்) காலியிடத்தில் புதியதாக கடைகள் கட்டுவதற்கும் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வதற்கும் மதிப்பீடு ரூ.1.50 கோடிக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் வணிக வளாகத்துடன் கடைகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

(ந.க.எண். 1430 / 2021 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

பாரதிபுரம் சந்தையில் உள்ள காலியிடத்தில் கடைகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 கோடிக்கு நிர்வாக அனுமதி கோரி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 247 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்புக் கூட்ட பொருள்**

**1.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் காணொலி வாயிலான ஆய்வு கூட்ட அறிவுரைகளில் நாள்.24/04/2021 தெரிவித்துள்ளவாறு, இம்மாநகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று மிக வேகமாக பரவி வருவதாலும், 48 வார்டுகளிலும் பொது இடங்களில் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID – 19) தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் நாளது தேதி வரை தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், 48 வார்டுகளிலும் வீடு வீடாக சென்று கொரோனா தொற்று பரவுவதை கட்டுப்படுத்தவும், தடுப்பூசி போடவும், பணியாளர்கள் தேவைபடுவதால், தற்பொழுது டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்காக பணிபுரிந்துவரும் தற்காலிக கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை (DBC பணியாளர்கள்) பணியின் அவசர அவசியம் கருதி முதல்நிலை பணியான கொரோனா வைரஸ் தொற்று பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பருவமழை தொடங்க உள்ள நிலையில் கூடுதலாக டெங்குகாய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 01/09/2021 முதல் 30/11/2021 முடிய 3 மாத காலத்திற்கு 60 நபர்களுக்கு இம்மாமன்றத் தீர்மானம் எண்.240 எண்ணிட்ட 13.9.2021ம் தேதிய தீர்மானத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், செப்டம்பர் மாத தொடக்கத்திலிருத்து இம்மாநகராட்சி பகுதிகளில் டெங்குகாய்ச்சல் பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து வருவதால், மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி அறிவுரைக்கிணங்க பணியினை இம்மாநகராட்சி பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணியினை தீவிரப்படுத்தும் பொருட்டு , மேலும் கூடுதலாக 60 நபர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளவும், பருவமழை தொடங்க உள்ளதால் டிசம்பர்-2021 முடிய மொத்தம் 120 பணியாளர்களைக்கொண்டு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது என சம்பந்தப்பட்ட துப்புரவு ஆய்வரால் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. எனவே, ஏற்கனவே டெங்குகாய்ச்சல் தடுப்பு பணியை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வரும் A.ராமலிங்கம், PWD ஒப்பந்தகாரர், அய்யம்பாளையம் அவர்கள் மூலமாகவே 24.09.2021 முதல் 31.12.2021 வரை

120 நாட்களுக்கு நீட்டிப்பு செய்து திண்டுக்கல் மாவட்ட 2020-2021 -கான தினக்கூலி ஊதிய பட்டியலில் கண்டுள்ளபடி நாள் ஒன்றுக்கு ரூ.389/- நிர்ணயம் செய்து, பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.50.00 இலட்சத்தை COVID-19 மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2785/2020/எச்2)

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் திண்டுக்கல் மாநகராட்சி சட்டவிதி பிரிவு 15ன் கீழ் முன் அனுமதி பெற்று 60 பணியாளர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கூடுதலாக 60 நபர்களுக்கும் (மொத்தம் 120 நபர்கள்) மேற்படி பணிக்கான காலத்தினை மேலும் 3 மாத காலத்திற்கு (24.09.2021 முதல் 31.12.2021 முடிய 99 நாட்களுக்கு) நீட்டிப்பு செய்தும், மேற்கண்ட பணிக்கான தோராய செலவினம் ரூ.50.00(ஐம்பது இலட்சம்)ஐ கொரோனா நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 248 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

2. திண்டுக்கல் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள **TN 57 AF 9465** டிப்பர் லாரி வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு **20.09.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | நிறுவனம் | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | குமார் ஆட்டோ கேர்,<br>ஜி.டி.என். ரோடு, திண்டுக்கல் | ரூ. 41,400/– |
| 2 | கே.எம்.ஏ மோட்டார்ஸ்,<br>மீனாட்சிநாயக்கன்பட்டி,<br>பைபாஸ் ரோடு,<br>திண்டுக்கல். | ரூ. 44,500/– |

<u>ந.க.எண்.5727/2021/எச்1</u>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள குமார் ஆட்டோ கேர், ஜி.டி.என்.ரோடு, திண்டுக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேல் நடவடிக்கை மேற்கொண்டு, பணி உத்திரவு வழங்கிட மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலகக் குறிப்பு.. மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 249 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

3.திண்டுக்கல் மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6, பிளாக் எண். 40, நகரளவு எண். 246, -ல் 1ஏக்கர் 14 செண்ட், திட்டச்சாலை அமைந்துள்ளதை விளக்கு அளிக்க கோரி திரு. விக்னேஷ், த/பெ. பி. ஆதிசயாந்தன், என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் வழக்கு எண். W.P. NO . 16296/2021-ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, வழக்கில் 4-ம் பிரதிவாதி மாநகராட்சி ஆணையரை சேர்த்துள்ளதால் மேற்கண்ட வழக்கில் ஆஜராகியுள்ளார். மேற்கண்ட வழக்கிற்கு வழக்கு கட்டணமாக ரூ.7,500/- வழங்க கோரி 14.09.2021-ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.(ந.க.எண். 7415/2021/எப்3)

அலுவலக குறிப்பு..

வழக்கறிஞர் திரு. லாரன்ஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ. 7,500/- வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 250 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

4. திண்டுக்கல் மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6, பிளாக் எண். 40, நகரளவு எண். 246, -ல் 1ஏக்கர் 14 செண்ட், திட்டச்சாலை அமைந்துள்ள மனை எண். 5,6,11, 14 முதல் 31 வரை உள்ள மனைகளை வரன்முறை செய்ய கோரி திரு. விக்னேஷ் த/பெ. பி. ஆதிசயாந்தன், என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் வழக்கு எண். W.P. NO . 15724/2021-ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, வழக்கில் 4-ம் பிரதிவாதி மாநகராட்சி ஆணையரை சேர்த்துள்ளதால் மேற்கண்ட வழக்கில் ஆஜராகியுள்ளார். மேற்கண்ட வழக்கிற்கு வழக்கு கட்டணமாக ரூ.7, 500/- வழங்க கோரி 14.09.2021-ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது. (ந.க.எண். 7416/2021/எப்3)

அலுவலக குறிப்பு..

வழக்கறிஞர் திரு. லாரன்ஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ. 7,500/- வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 251 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

5. இம்மாநகராட்சியின் 48 வார்டுகளிலும் உருவாகும் குப்பைகள் இரண்டாம் நிலை சேகரிப்பு மூலம் முருக பவனம் கலவை உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வரப்படுகிறது. இந்நிலை சுமார் 60 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருவதால், சேகரமாகியுள்ள குப்பைகளின் அளவு தரை மட்டத்திலிருந்து சுமார் 3 மீட்டர் உயரமாக உள்ளது. எனவே குப்பை லாரிகள் உரக்கிடங்கின் உள்ளே சென்று குப்பையினை கொட்டுதல் மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் வண்டிகள் ஈர கழிவு /

சேறுகள் / குப்பைகளில் மாட்டிக்கொண்டு எடுத்திட இயலாத நிலையிலும், இயக்குவதற்கு கடினமாகவும் சிரமமாகவும் உள்ளது. எனவே செயின்டோசர் இயந்திரம் மூலம் குப்பைகளை உள்ளே தள்ளினால் மட்டுமே அன்றாடம் நகரில் உருவாகும் உத்தேசமாக 92 மெட்ரிக் டன் குப்பைகளை கொட்ட இயலும். எனவே அரசு துறையான வேளாண்மை பொறியியல் துறைக்குச் சொந்தமான செயின்டோசர் வாகனத்தினை சுமார் 500 மணி நேரத்திற்கு (வாடகை அடிப்படையில்) இவ்வலுவலக உத்திரவு ந.க.எண்.14285/2015/எச்2 நாள் 08.05.2020ன்படி பணி மேற்கொள்ளப்பட்டு கடந்த **22.09.2021** வரை 500 மணிநேரம் செயின்டோசர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2) மேலும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், குப்பைகளை எரித்து அழிப்பதற்கான கட்டுமான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதால் அவ்வாறு சேகரமாகும் குப்பைகளையும் பழனி ரோடு உரக்கிடங்கில் சேகரம் செய்யும் பணியை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் மேற்படி உரக்கிடங்கில் அன்றாடம் சேகரித்து வரப்பெறும் குப்பைகளை செயின்டோசர் வாகனம் மூலம் தினந்தோறும் உடனுக்குடன் தள்ள வேண்டியுள்ளது.

3)எனவே மேற்கண்ட பணிக்காக செயின்டோசர் வாகனம் கூடுதலாக 500 மணி நேரத்திற்கு 24.09.2021 முதல் பயன்படுத்திக்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4,20,000/-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது (**ந.க.எண்.14285/2015/எச்1**).

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. உத்தேச செலவினம் ரூ.4,20,000/-ஐ மாநகராட்சி வருவாய் மூலதன நிதியில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதி எதிர்நோக்கி, பணி உத்திரவு வழங்கி 24.09.2021 முதல் பணி மேற்கொண்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்: 252 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**6.** திண்டுக்கல் மாநகராட்சி 6வது வார்டு கணபதி அக்ரஹாரத்தில் உள்ள பாலம் பழுதடைந்து விட்டதால் மழைக் காலங்களில் தண்ணீர் வெளியேற இயலாமல் அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து விடுகின்றது. இதனால் அப் பகுதியில் சுகாதாரக்கேட்டை ஏற்படுத்துவதடன் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. ஷை பாலத்தை இடித்து விட்டு புதியதாக கட்டுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ-55000/-- க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**( ந.க.எண். 11658 / 2019 / இ 4)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 253 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**7.** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு தெருவிளக்கு பராமரிப்பு பிரிவிற்கு 2021-22ம் ஆண்டிற்கு இரண்டாவது ஆறு மாத காலத்திற்கு 1 முதல் 48 வார்டுகளில் உள்ள தெரு விளக்குகளை பராமரிப்பதற்குத் தேவையான மின் உதிரி பாகங்கள் வாங்குவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 7786 / 2021/ இ3 )**

**<u>அலுவலக குறிப்பு</u>**

3) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
4) வருவாய் நிதி 2021-22 ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 254 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**8.** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் லாரி வாகன எண். டி.என்.57.எ.3210க்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு கீழ்க்கண்ட வரிகளை செலுத்தி அதன் உண்மை நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தகுதிச் சான்று கட்டணம் | - | ரூ. 850/- |
| புகை கட்டுப்பாட்டுச் சான்று கட்டணம் | - | ரூ. 300/- |
| ஸ்டிக்கர் கட்டணம் | - | ரூ.5000/- |
| புதுப்பிப்புக் கட்டணம் | - | <u>ரூ. 750/-</u> |
| மொத்தம் | - | **<u>ரூ.6900/-</u>** |

மேற்காணும் தொகை ரூ.6900/- ஐ திரு.பி.பழனிவேல், ஓட்டுநர் பெயரில் வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 7477 / 2021 / இ3)

**<u>அலுவலக குறிப்பு..</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 255 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**9.** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் கசிவு கண்டறியும் வாகன எண். டி.என்.57.க்யூ.3255 க்கு 2021 -- 2022 ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு கீழ்க்கண்ட வரிகளை செலுத்தி அதன் உண்மை நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தகுதிச் சான்று கட்டணம் | - | ரூ. 850/- |

| | | |
|---|---|---|
| புகை கட்டுப்பாட்டுச் சான்று கட்டணம் | - | ரூ. 300/- |
| ஸ்டிக்கர் கட்டணம் | - | ரூ.3530/- |
| புதுப்பிப்புக் கட்டணம் | - | ரூ. 750/- |
| மொத்தம் | - | **ரூ.5430/-** |

மேற்காணும் தொகை ரூ.5430/- ஐ திரு.கு.ஜோதிபாஸ்கர், ஓட்டுநர் பெயரில் வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.7478/2021/ இ3)

**அலுவலக குறிப்பு..** மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 256 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**10.** திண்டுக்கல் மாநகராட்சி கோபாலசமுத்திரம் மழைநீர் சேகரிப்பு மையம் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களால் 20.09.2021 அன்று நேரடி ஆய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்வின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்அருகில் உள்ள கட்டிடங்களின் மேற்கூரையிலிருந்து மழைக்காலங்களில் பெறப்படும் மழைநீரை கோபாலசமுத்திரம் குளத்திற்கு குழாய்கள் பதித்து சென்று சேகரம் செய்யும் பணி உட்பட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள். அதன்படி தயார் செய்யப்பட்ட கீழ்க்காணும் மதிப்பீடுகளுக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கோபாலசமுத்திரம் மழைநீர் சேகரிப்பு மையம் வாகன நிறுத்துமிடத்தில் பேவர் கற்கள் பதிக்கும் பணி | 9.00 |
| 2 | கோபாலசமுத்திரம் மழைநீர் சேகரிப்பு மையம் சுற்றுச்சுவர் மற்றும் இரும்பு கிரில்களுக்கு வர்ணம் பூசும் பணி | 4.50 |
| 3 | கோபாலசமுத்திரம் கிழக்கு கரை சாலை வடிகால் சுவற்றினை உயர்த்தி கட்டும் பணி | 2.50 |
| 4 | அரசு தலைமை மருத்துவமனை சாலையின் குறுக்கே பாலம் அமைக்கு பணி | 3.00 |

**( ந.க.எண். 11658 / 2019 / இ 3)**

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்
2) இப் பணியினை வருவாய் நிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம் எண்: 257 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**11.** திண்டுக்கல் மாநகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தினசரி நாளிதழ் வாங்குவதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/- செலவாகிறது. எனவே, 2021-2022ம் ஆண்டிற்கு தினசரி நாளிதழ் செலவினத்திற்காக ரூ.10,000/-

(ரூபாய் பத்தாயிரம்) மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.7664 /2021/டி1).

**<u>அலுவலக குறிப்பு..</u>**

ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மானம் எண்: 258 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**12.** இம்மாநகராட்சியில் வருவாய் நிதி 2021-22ன் கீழ் திருச்சி ரோடு -- ஆர்.எம்.காலனி ரவுண்ட் ரோடு மற்றும் அரசு மருத்துமனை அருகில் அமைந்துள்ள உயர்கோபுர மின் விளக்குகளில் ஏற்கனவே பழுது அடைந்துள்ள சோடியம் ஆவி விளக்குகளுக்குப் பதிலாக 8 எண்ணம் 200 W Flood Light பொருத்தும் பணிக்கு 08.09.2021 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | ORCQ Industries | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.5000/- மதிப்புள்ள வங்கி சேமிப்பு பத்திரம் |
| 2. | RIO AQUA TECH | 6.02% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.5000/- மதிப்புள்ள வங்கி சேமிப்பு பத்திரம் |

**( ந.க.எண். 3829 / 2021/ இ 3 )**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. ரூ.5,00,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண். 123, நாள் 03.05.2021 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.01% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ORCQ Industries, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 259 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

---

**13.** இம்மாநகராட்சியில் வருவாய் நிதி 2021 -- 22 இன் கீழ் கோட்டைக்குளம் சாலையில் புதுப்பிக்கப்பட்ட காந்தி தினசரி காய்கறி மார்க்கெட்டின் முன்புறம் ஆர்.சி.சி. கான்கீரிட்டினால் ஆன 12 கடைகள் கட்டும் பணிக்கு 16.09.2021 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எ ண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.என். தினேஷ் | 4.94 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.40000/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |
| 2. | திரு.எ.முகமது ரபீக் | 10.28% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.40000/- மதிப்புள்ள வங்கி வரைவோலை |

(ந.க.எண். 8247 / 2019 / இ4 )

<u>அலுவலக குறிப்பு</u>

1. ரூ.40,00,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண். 236 , நாள் 13.09.2021 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றதால் விலை விகிதத்தை குறைத்து தருமாறு கூடுலில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்திருந்த திரு.எம்.ஸ்ரீதரன் ஒப்பந்ததாரரிடம் ……9.2021 ம் தேதிய அறிவிப்பில் கேட்கப்பட்டபோது வைஷயார் விலை விகிதத்தினை குறைத்து தர இயலாதென தெரிவித்ததன் காரணமாகவும், பணியின் அவசர அவசியம் கருதியும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தை கருத்தில் கொண்டும் கூடுதலில் குறைவாக 4.94% மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.என். தினேஷ் , ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>தீர்மானம் எண்: 260 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>

**14.** திண்டுக்கல் மாநகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண். 2, பிளாக் எண். 13, நகரளவு எண். 544/5 பகுதி, 6பகுதி மற்றும் 9பகுதி 1364.66 சதுரமீட்டர் பரப்பளவு ஆர்.எம்.காலனி 8வது குறுக்குத்தெருவில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடம் குறித்து திரு. சுருளிவேல் த/பெ. சோனாசலம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் வழக்கு எண். W.P.(MD) 14154/2021 –ல் வழக்கு தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கிற்கு 18.11..2021 –க்குள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தில் இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் 25.08.2021 அன்று நீதிமன்றத்தில் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட வழக்கினை நடத்தி கொடுத்தமைக்கு திரு. ஜே. லாரன்ஸ், சென்னை உயர்நீதி (மதுரைகிளை) வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ.7,500/- வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது. **(ந.க.எண். 4485/2021/எப்3)**

**அலுவலக குறிப்பு..**

வழக்கறிஞர் திரு. லாரன்ஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ. 7,500/- வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் எண்: 261 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>

**15.** இம்மாநகராட்சியில் கல்வி நிதி 2020 -- 21 இன் கீழ் நேருஜி நினைவு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியின் கிழக்குப்புற சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு 25.08.2021 அன்று மூன்றாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.ஸ்ரீதரன் | 4.96% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.6000/- மதிப்புள்ள வங்கி சேமிப்பு பத்திரம் |
| 2. | திரு.கே.வேல்முருகன் | 12.05% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.6000/- மதிப்புள்ள வங்கி சேமிப்பு பத்திரம் |

(ந.க.எண்.11658 / 2019 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

1. ரூ.6,00,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண். 154 , நாள் 30.06 .2021 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. மூன்றாம் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றதால் விலை விகிதத்தை குறைத்து தருமாறு கூடுலில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்திருந்த திரு.எம்.ஸ்ரீதரன் ஒப்பந்ததாரரிடம் ......8.2021 ம் தேதிய அறிவிப்பில் கேட்கப்பட்டபோது ஷையார் விலை விகிதத்தினை குறைத்து தர இயலாதென தெரிவித்ததன் காரணமாகவும், பணியின் அவசர அவசியம் கருதியும், மூன்றாம் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாலும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தை கருத்தில் கொண்டும் கூடுதலில் குறைவாக 4.96% மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஸ்ரீதரன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
3. கூடுதலாகும் செலவினத் தொகை மாநகராட்சியின் வருவாய் நிதி 2021.-- 22 இன் கீழ் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 262 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

**16.** திண்டுக்கல் மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டப் பிரிவின் கீழ் இயங்கி வரும் Desilting Vehicle எண். TN.57.AF. 7382 ல் பாதாள சாக்கடை தொட்டியிலுள்ள மண்ணை அள்ளக்கூடிய பக்கெட்டின் அளவு பெரியதாக உள்ளதால் அதனை குறைத்துஅதில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய 23.4.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது- அதன்படி கீழ்க்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப் பெற்றன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s. ஸ்ரீசக்தி விநாயகர் ஆட்டோ மொபைல்ஸ், மதுரை -625 020 | 1,02,010/- |
| 2 | M/s. சத்குரு மோட்டார்ஸ், மதுரை -- 625 018 | 96,570/- |
| 3 | M/s. A.S.R. பாடி ஒர்க்ஸ், மதுரை -- 625 018 | 92,620/- |

மேற்கண்ட விலைப்புள்ளிகளின்படி குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. A.S.R. பாடி ஒர்க்ஸ், மதுரை அவர்களின் விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பொது சுகாதாரப் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பழுது பணி மேற்கொள்ளப்பட்டதும், பழுது பணி மேற்கொண்டதற்கான பட்டியல் தொகையினை திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் 2013 பிரிவு 15ன் கீழ் செலவினத் தொகை ரூ.92,620/ -- வழங்கியதையும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண்.** 1346 / 2021 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

மாமன்றம் பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்: 263 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**